# இஸ்லாத்தில் வன்முறைக்கு அணுவளவும் இடமில்லை

இஸ்லாம் என்றால் சாந்தி மார்க்கம். சாந்தி மார்க்கத்தில் வன்முறைக்கோ, தீவிரவாதத்திற்கோ அணுவள வும் அனுமதி இல்லை என்பதே உண்மையாகும். எதிரும், புதிருமாக நேரடியாக மோதும் போர்க்களத்தில் கூட வயதானவர்களைக் கொல்லக்கூடாது; பெண்களைக் கொல்லக்கூடாது; சிறுவர்களைக் கொல்லக்கூடாது; ஏன்? புற முதுகு காட்டி ஓடுகிறவர்களையே கொல்லக்கூடாது; பயிர் பச்சைகளை அழிக்கக்கூடாது, உயிர்ப் பிராணிகளைக்கூட தீயிட்டு பொசுக்கக்கூடாது என தெளிவாக சட்டம் வகுத்து வைத்திருக்கும் இஸ்லாமிய மார்க்கத்தில் வன்முறைக்கும், தீவிரவாதத்திற்கும் எப்படி இடமிருக்க முடியும்?

அப்படியானால் இன்று உலகளாவிய அளவில் வன்முறைச் செயல்களிம், தீவிரவாதச் செயல்களிம் முஸ்லிம்கள்தானே அதிகமாக ஈடுபடுவதாகச் செய்தி ஊடகங்கள் கூறுகின்றன. முஸ்லிம்கள் பலர் அப்பட்டமாகப் பிடிபட்டு தண்டிக்கவும் படுகிறார்களே எனக்கேட்கலாம். ஆம்! உண்மைதான். அதற்கு இரண் டு காரணங்கள் இருக்கின்றன. எப்படி முஸ்லிம்களில் சிலர் குர்ஆன், ஹதீஸ் தெளிவாக மறுத்துக்கூறும் காரியங்களான குடி, விபச்சாரம், சூது, திருட்டு, கொலை, கொள்ளை, வட்டி போன்ற பாவமான காரியங்களில் ஈடுபடுகிறார்களோ அதே போல் வன்முறைச் செயல்களிம், தீவிரவாதச் செயல்களிம் ஈடுப டுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் முறையாக இஸ்லாமிய சட்டங்களை விளங்கி அதன்படி நடப்பவர் இல்லை, பெயர்தாங்கி முஸ்லிம்கள். தங்களின் அற்ப இவ்வுலக வாழ்க்கையைப் பெரிதாக நினைத்து இவ்வுலக ஆதாயங்களுக்காக இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறவர்களாக மட்டுமே இருக்கமுடியும்.

ஒருநாட்டிள்ள மக்கள் தங்களுக்குள்ளும், தங்களின் எதிரிகளாகக் கருதுகிறவர்களிடமும் முட்டி மோதி அதன் காரணமாக அந்த நாட்டின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி, தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பும் வளர்ந்த நாடுகள் இப்படி வன்முறையிம், தீவிரவாதத்திம் ஈடுபடுகிறவர்களுக்கு மறைமுகமாக பெரும் அளவு பொருளாதார உதவி செய்வதால், அந்த அற்பக்காசுக்கு ஆசைப்பட்டு வன்முறைகளிம், தீவிரவாதங்களிம் ஈடுபடும் பெயர் தாங்கிகள் நிறையவே இருக்கிறார்கள். அவர்களுக்கும் இஸ்லாமிய மார்க்கத்திற்கும் கிஞ்சிற்றும் சம்பந்தமே இல்லை.

அடுத்து ஜிஹாத், ஷஹீத் போன்ற மார்க்கச் சம்பந்தப்பட்ட உன்னத வார்த்தைகளைச் சொல்லி, சில மார்க்க அறிஞர்கள் முஸ்லிம்களை குறிப்பாக இளங்கன்று பயம் அறியாது என்ற நிலையிள்ள இருபது வயதுக்கும் குறைவான வாலிபர்களுக்கு மூளைச்சலவை செய்து இப்படிப்பட்ட வன்முறைச்செயல்களிம், தீவிரவாதச் செயல்களிம் ஈடபடுத்துகிறார்களே என்று கேட்கலாம்.

அந்த மார்க்க அறிஞர்கள் இஸ்லாத்தை முறையாக அறிந்த மார்க்க அறிஞர்கள் அல்ல. மார்க்கத்தைப் பிழைப்பாகவும், உலக வாழ்வில் பேர், புகழைக் குறியாகவும் கொண்ட புரோகித மதக்கல்வி கற்ற புரோகித வர்க்கத்தினரே இப்படிச் செயல்படுகின்றனர். அவர்கள் உலக வாழ்வில் பெருங்குறியாக இருப்பதால், பெருங்கொண்ட மக்கள், குறிப்பாக வாலிபர்கள் எந்தப் போக்கை விரும்புவார்களோ அதற்கேற்றவாறு மார்க்கத்தை திரித்து வளைத்து தங்கள் சொந்த யூகங்களைப் புகுத்தி சட்டம் சொல்பவர்களே. எனவே

இஸ்லாமிய மார்க்கத்தை மதமாக்கி அது கொண்டு பிழைப்பு நடத்தும் மார்க்க அறிஞர்கள் என்று சொல்லிக் கொள்ளும் புரோகிதர்கள் சத்திய மார்க்கத்தைப் பிரதிபலிக்கும் அதிகாரமோ, ஆற்றலோ பெற்றவர்கள் அல்ல.

அவர்களை மையப்படுத்தி இஸ்லாமிய மார்க்கத்தை எடைபோடுவது தவறாகும். அல்குர்ஆனுக்கு அப்படிப்பட்டவர்கள் கொடுக்கும் விளக்கமும் தவறாகும். அவர்களது சுய நலம் கலந்திருப்பதால் அவர்களால் உள்ளதை உள்ளபடி சொல்ல முடியாது. சத்தியத்தை நேர்வழியை திரித்து வளைத்துத்தான் சட்டம் சொல்வார்கள். அவர்கள் நியாயப்படுத்தும் வன்முறைச் செயல்கள், தீவிரவாத போக்கு, அப்பாவிகளைக் கொன்று குவிப்பது, தற்கொலைப்படைத் தாக்குதல்கள் இவைகளில் எதையும் தூய இஸ்லாமிய மார்க்கம் அணுவளவும் அனுமதிக்கவில்லை. இப்படிப்பட்ட சுயநல புரோகிதர்களின் தவறான மதத்தீர்ப்பின் அடிப்படையில்தான், தகவல் ஊடகங்கள் இப்படிப்பட்ட தவறான செயல்பாடுகளை தூய இஸ்லாமிய மார்க்கத்துடன் இணைத்து செய்திகள் வெளியிட்டு ஆதாரம் அடைகின்றன.

புரோகிதம் கலப்படமில்லாத தூய இஸ்லாமிய மார்க்கம் ஒரு போதும் வன்முறைச்செயல்களையோ, தீவிரவாதச் செயல்களையோ தற்கொலைப் படைத்தாக்குதல்களையே ஒரு போதும் சரிகாணவில்லை. அப்பாவியான ஒருயிரைக் கொல்பவன் முழு உலகத்தையும் அழிப்பவன் போன்ற பெரும் பாவியாவான் என்றே இறைவனது இறுதி வழிகாட்டல் நூலான அல்குர்ஆன் கூறுகிறது. (பார்க்க அல்குர்ஆன் 5:32)

டிசம்பர் 2005 அந்நஜாத்